5 ; ை மாற்றுத் திட்டத்தினை விரிவுபடுத்துதல்.

*வினா எண் 329—திருவாளர்கள் கோ. விஸ்வநாதன், எம். சின்னசாமி: சி. சிசிவப்பிரகாசம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை நகருக்கு வெளியில் குடிசைப் பகுதி மாற்றும் பணியை விரிவுபடுத்தும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(ஆ) அப்படியிருக்குமாயின் அதனைப் பற்றிய விளக்கம் தேவை ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) தற்போது வீட்டு வசதி வாரியம் குடிசை மாற்றுத் திட்டத்தை சென்னை நகருக்கு வெளியே கோவை, மதுரை, திருச்சி மற்றும் சேலம் ஆகிய மாவட்டத் தலைநகரங்களில் மட்டுமே நிறைவேற்றி வருகிறது. மற்ற மாவட்டத் தலைநகரங்களுக்கும், சிறு நகரங்களுக்கும் இத்திட்டத்தினை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. மா. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிநீர் வாரியத்தில் சென்னை நகரில் பெருநகர் குடிநீர் வடிகால் வாரியம் என்றிருப்பதுபோல், குடிசை மாற்று வாரியத்திற்கென்று தனியாகப் பிரிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைப் பகுதிகளுக்கென்று ஒரு தனி வாரியம் இப்போது இருக்கிறதா என்று கேட்டார்கள். சென்னைக்கு அப்பாலுள்ள குடிசை மாற்றுப் பகுதிகளிலுள்ள வேலைகளை அவுசிங் போர்டு கவனித்துக் கொள்கிறது.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே மட்டும் குடிசைவாசிகள் இருக்கிறார்கள் என்பதல்ல. தமிழகத்தின் மற்ற பெரு நகரங்களில் எல்லாம் ஏராளமான குடிசைவாசிகள் இருக்கிறார்கள். இப்போது குறைந்தபட்சம் மதுரை, கோவை மாநகராட்சிப் பகுதிகளில் தனித்தனியாக குடிசை மாற்று வாரியம் அமைக்க அரசு முன் வருமா ? சென்னை நகர குடிசை மாற்று வாரியப் பணிகளை விரிவுபடுத்த இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு யோசனை இப்போது இல்லை.

1981 மார்ச் 2]

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு, குடியாத்தம் போன்ற பகுதிகளில் ஏராளமான பீடித் தொழிலாளர்கள் இருப்பதால், குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு. திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே முன் வருவதற்கில்லை.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, நகரப் பகுதிகளிலேதான் இப்போது நடைமுறைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. கிராமப் பகுதிகள் நடைமுறைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை என்ற வகையில் பதில் சொன்னார்கள். நம்முடைய அரசை நம்பி, கிராமப் பகுதிகளிலே இருக்கக் கூடிய ஏராளமான மக்கள் நமக்கு ஓட்டளித்தார்கள். ஆகவே இந்தத் திட்டத்தை குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக கிராமப் புறங்களுக்கும் விரிவு படுத்துவதற்கு மறு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளிலே இருக்கக்கூடிய மக்களுக்கு கூட்டுறவு வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் ஒரு இலட்சம் வீடுகள் கட்டுவதற்கான திட்டம் செயல்பட்டு வருகிறது ; அதை உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, சென்னை நகரம் தவிர்த்து ஏனைய நகரங்களில் முன்பிருந்த அரசு காலத்தில், இன்றைய சபாநாயகர் அவர்கள், அந்த அமைச்சர் பொறுப்பிலிருந்த வீட்டு வசதி வாரியத்தின் சார்பாக வேறு பல இடங்களுக்கு குடிசை மாற்றுப் பணிகளை கவனித்து வந்தார்கள். இப்போது அந்தப் பணி தொடருகிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, தொடரப்படுகிறது. சேலம், திருச்சி, மதுரை, கோவை நகரங்களில் தொடரப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சேலத்தில் நடக்கிறது.

வேலூர் நகர குடிதண்ணீர்த் திட்டம்.

*வினா எண் 330— திரு. இல. பலராமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காடு மாவட்டம், வேலூர் நகர குடி தண்ணீர் திட்டத்தின் மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

(ஆ) இதில் தற்போது செலவு எவ்வளவு ?

(இ) இத் திட்டம் எப்போது முடிக்கப்படும் ?